## திராவிட இயக்கம் உற்சாகத்தோடு கொண்டாடும் திருநாள்:

# “தமிழர்களுக்கென்று ஒரு விழா என்றால் அது பொங்கல்தான்!”

## கொளத்தூர் தொகுதியில் பொங்கல் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமித உரை!

சென்னை, ஜன.12-

திராவிட இயக்கம் உற்சாகத்தோடு கொண்டாடும் திருநாள் என்றும், தமிழர்களுக்கென்று ஒரு விழா என்றால் அது பொங்கல்தான் என்றும் கொளத்தூர் தொகுதியில் பொங்கல் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

கொளத்தூர் தொகுதியில் நேற்று (11.1.2025) நடைபெற்ற பொங்கல் திருநாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:

எத்தனை நிகழ்ச்சியில் கலந்துகொண்டாலும், என் கொளத்தூர் தொகுதியில் எனது மக்களுடன் கலந்துகொள்ளும் நிகழ்ச்சி எனக்கு எப்போதுமே ’ஸ்பெஷல்! அதுவும் அது பொங்கல் விழா என்றால், அது எவ்வளவு ஸ்பெஷல் எனச் சொல்லவா வேண்டும்! ஒரு வாரமாகச் சட்டமன்றக் கூட்டத்தொடர், அதில் பரபரப்பான பல நிகழ்வுகள் என்று எல்லாவற்றையும் முடித்துவிட்டு நேராக இங்கேதான் வந்திருக்கிறேன்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.1.2025) கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவில், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் மாணவ, மாணவியர்களுடன் சமத்துவ பொங்கல் வைத்து, 1000 நபர்களுக்கு புத்தாடைகள் மற்றும் பச்சரிசி, வெல்லம், பாசிப்பருப்பு, முந்திரி, திராட்சை, ஏலக்காய், நெய், கரும்பு, குடை, பிளாஸ்க், டிபன் பாக்ஸ் மற்றும் காலண்டர் கொண்ட பொங்கல் பரிசுத் தொகுப்புகளை வழங்கி, வாழ்த்தினார். உடன் திருமதி. துர்கா ஸ்டாலின், மேயர் பிரியா ராஜன் மற்றும் பலர் உள்ளனர்.

**கொளத்தூர் தொகுதிக்கு வந்தாலே மகிழ்ச்சிதான்!**

எனக்கு ‘எனர்ஜி’ வேண்டுமென்றாலும் நீங்கள்தான், கொஞ்சம் ’ரிலாக்ஸ்’ ஆகவேண்டும் என்றாலும் கொளத்தூர்தான். அதுவும் தமிழர்களின் தனிப்பெரும் விழாவான பொங்கல் திருநாளை உங்களுடன் சேர்ந்து கொண்டாடுவதை விட வேறென்ன மகிழ்ச்சி இருக்க முடியும்!

பொங்கலையும் தி.மு.க.வையும் பிரிக்க முடியாது. திராவிட இயக்கம் மிக உற்சாகத்தோடு கொண்டாடும் ஒரு திருநாள் என்றால் அது பொங்கல் திருநாள்தான். ஏனென்றால், இதில் மதம் இல்லை! சாதி இல்லை! வன்முறை இல்லை! உழைப்பைப் போற்றும் தத்துவம்தான் இருக்கிறது. சமத்துவம் இருக்கிறது! தமிழர்களின் பண்பாடும், வீரமும், கொண்டாட்டமும் நிறைந்த விழா பொங்கல் விழா!

தந்தை பெரியாரே சொல்லியிருக்கிறார். “தமிழர்களுக்கென்று ஒரு விழா என்றால் அது பொங்கல்தான்” என்று சொன்னவர் பெரியார். அதுவும் ஒரு பொங்கல் வாழ்த்துச் செய்தியில், “திருக்குறளை உங்களுக்குப் பொங்கல் பரிசாகத் தருகிறேன்” என்று சொன்னார் பெரியார். திராவிடநாடு, முரசொலி என நம் இயக்க இதழ்கள் எல்லாம் பொங்கலுக்குத்தான் ‘சிறப்புமலர்’ கொண்டு வருவார்கள்.

தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சரானதும், தை பிறப்பில் இருந்து திருவள்ளுவர் ஆண்டுக் கணக்கு தொடக்கம், பொங்கல் இரண்டாம் நாள் திருவள்ளுவர் நாளாக அறிவிப்பு எனப் பொங்கலைச் சிறப்பிக்கப் பல முயற்சிகளை எடுத்தார்.

இந்த ஆண்டு, பொங்கல் திருநாளைத் தமிழ்நாட்டு மக்கள் எல்லோரும் சிறப்பாக சொந்த ஊர்களில் குடும்பத்தோடும் நண்பர்களோடும் ஒன்றாகச் சேர்ந்து எழுச்சியோடு கொண்டாட வேண்டும் என 17ஆம் தேதி ஒரு நாள் கூடுதலாக விடுமுறையும் விட உத்தரவிட்டுக் கையெழுத்திட்ட கைதான் இந்தக் கை.

அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் உரையாற்றினார்.



பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், சேப்பாக்கம் 63 ஆ வட்ட பகுதி பொதுமக்களுக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பொங்கல் பரிசு பொருட்களை வழங்கினார். உடன், அமைச்சர் முனைவர் பொன்முடி, தயாநிதிமாறன் எம்பி, மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, பகுதி செயலாளர் எஸ்.மதன்மோகன், வட்ட செயலாளர் சின்னராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.

## நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் இன்று காலை நடைபெறும் அயலகத் தமிழர் தினவிழாவில்

# அயலகத் தமிழர்களுக்கு விருதுகள் வழங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை!

## கழகத்தினர் திரண்டு வந்து பங்கேற்கும்படி அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

சென்னை, ஜன. 12 -

நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் இன்று காலை நடைபெறும் அயலகத் தமிழர் தின விழாவிற்கு வருகை தரும் தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தினர் திண்டு வந்து, நந்தம்பாக்கம் வர்த்தக மையம் முன்பு இன்று காலை 9.00 மணியளவில் மாபெரும் வரவேற்பு அளித்திட வேண்டும் என்று மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை :

ஆலந்தூர் தொகுதி, நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் உள்ள கூட்ட அரங்கில் அயலகத் தமிழர் தின நிறைவு விழா இன்று காலை 10 மணி அளவில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு விருதுகளை வழங்கி சிறப்புரையாற்று கிறார்.

இவ்விழாவிற்கு வருகைத் தரும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் நந்தம்பாக்கம் வர்த்தக மையம் முன்பு இன்று காலை 9.00 மணியளவில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.



இவ்விழாவில் பங்கேற்க வருகை தரும், நம்முடைய உயிரனைய தலைவர் தமிழ்நாடு முதல்வர் தலைவர் தளபதி அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் நந்தம்பாக்கம் வர்த்தக மையம் முன்பு மேள, தாளம், பேண்டு வாத்தியம் முழங்க பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வரவேற்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள கழக நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்க வேண்டும் என்று மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

# வாசிப்பு இல்லாத மனிதன் தனது சிந்தனைகளை புதுப்பித்துக்கொள்ள முடியாது!

## முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் வாசகர் சந்திப்பு நிகழ்ச்சியில் கவிஞர் சல்மா பேச்சு!



சென்னையில் நடைபெறும் 48-வது புத்தகக் காட்சியில் திராவிட இயக்க ஆளுமை ஒருவருடன் தினந்தோறும் வாசகர்கள் பங்கேற்கும் கலந்துரையாடல் நிகழ்ச்சியை முத்தமிழறிஞர் பதிப்பகம் நடத்தி வருகிறது. இதில் 10.01.2025 அன்று தி.மு.க. செய்தித்தொடர்பு இணைச்செயலாளர் கவிஞர் சல்மா கலந்துகொண்டு பேசினார். வாசகர்கள் பலரும் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

அவர் பேசியதாவது:

ஒரு காலத்தில் இலக்கியம் என்றால் அதில் சாதி மேலோங்கி இருந்தது. குறிப்பிட்ட சாதியினர் மட்டும்தான் இலக்கியம் எழுத முடியும். அப்படிப்பட்ட நிலையில் இருந்த இலக்கியத்தை வெகுமக்கள் மத்தியில் கொண்டுவந்து சேர்த்தது திராவிட இயக்கம். கலை மக்களுக்கானது என்ற நிலையையும் உருவாக்கியது திராவிட இயக்கம். கலையின் மூலம் பகுத்தறிவு சிந்தனைகளை வளர்த்து, சமூக மாற்றத்தை ஏற்படுத்தியது திராவிட இயக்கம்.

திராவிட முன்னேற்றக் கழகம்தான் எழுத்தை ஒரே வடிவத்தில் தேங்கி விடாமல் கவிதை, கதை, நாடகம், சினிமா என பல்வேறு மட்டங்களில் தங்கள் படைப்புத்திறனை மக்களிடத்தில் வெளிப்படுத்தினர். அவற்றின் ஊடாக தங்கள் கொள்கைகளை மக்களிடத்தில் கொண்டு சேர்த்தனர். அதனால் ஏற்பட்ட சமூக மாற்றத்தை விரும்பாத கூட்டம் இன்றைக்கும் இருக்கிறது. அதனால்தான் அந்த கூட்டம் நவீன இலக்கியங்களில் திராவிட இலக்கியத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அண்ணா, கலைஞரை இணைத்துக்கொள்வதில்லை. இந்த இடத்தில் ஒரு சூழ்ச்சி கையாளப்பட்டிருக்கிறது.

**திராவிட இலக்கியத்தின் தாக்கம்!**

கலைஞரின் பராசக்தி ஏற்படுத்திய தாக்கம் எல்லோருக்கும் தெரியும். அதுபோல, தன்னடக்கம் என்ற ஒரு கதையை கலைஞர் எழுதியுள்ளார். அந்த கதையில் பிளேக் நோய் வந்து பலர் இறக்கும்போது, கடவுளுக்கு என்ன வேலை? ஏன் காப்பாற்றவில்லை என்று உடலை அடக்கம் செய்யும் பணியில் ஈடுபட்டிருப்பவர் கேட்பது போல அந்த கதை எழுதப்பட்டிருக்கும். அதேபோல குப்பைத்தொட்டி என்று ஒரு கதை உள்ளது. இல்லஸ்டிரேட் வீக்லியில் இந்த கதை மொழிபெயர்க்கப்பட்டபோது, அதற்கு எதிராக சிலர் போராட்டத்தை முன்னெடுத்தனர். ஆனால் கதையை நிறுத்தக்கூடாது என ஆயிரக்கணக்கானோரிடம் இருந்து கடிதங்கள் வந்து குவிந்தன.

ஆக, ஒரு சில இலக்கியவாதிகளோ, எழுத்தாளர்களோ புறக்கணிப்பதனால் திராவிட இயக்கத்திற்கும் இலக்கியத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றாகிவிடாது. இன்றைக்கு கலைஞர், அண்ணாவின் பெயரால் திராவிட முன்னேற்றக் கழகம் நூலகங்களை உருவாக்கி இருக்கிறது. அறிவுசார் சொத்தாக நூலகங்களை ஊர் ஊராக ஏற்படுத்தி வருகிறது.

**வெற்றிபெற வாசிப்பு தேவை**

30 ஆண்டுகளுக்கு முன்பு பெண் குழந்தைகளை கல்வி கற்க அனுமதிக்காத சமூக சூழல் என்னுடையது. அத்தகைய சூழலில் என்னுடைய பாதை, அடையாளம், வாழ்க்கையை நானே தீர்மானிக்க உதவியது நூல்கள்தான். அதில் இரண்டு வகையான நூல்கள் கிடைத்தன. ஒன்று சோவியத் இலக்கியங்கள். மற்றொன்று பெரியார், அண்ணா சார்ந்த திராவிட நூல்கள். மக்கள் மொழியில் எளிமையான நடையில் திராவிட இலக்கியங்கள் இருந்தன. கம்யூனிசம் எதை மக்களுக்கு கற்றுத்தர வேண்டுமென்று நினைத்ததோ, அதைத்தான் திராவிட இலக்கியங்கள் செய்தன. இந்த வாசிப்புதான் எனக்கு எது சரி, எது தவறு என்ற புரிதலை ஏற்படுத்தியது. வாசிப்பு இல்லாத மனிதன் தனது சிந்தனைகளை எந்த வடிவத்திலும் புதுப்பித்துக்கொள்ள முடியாது. வாசிப்பின் ஊடாக நமது கருத்துக்களையும், சிந்தனைகளையும் பெறும்போதுதான் நாம் வெற்றி பெறுவோம்.

## மேயர்.பிரியாராஜன் தலைமை! சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட தொகுதிகளில்

# 10-வது நாளாக அமைச்சர் பி.கே.சேகர்பாபு மக்கள் தேவைகள் தீர்க்கும் பயணம்!

## மக்கள் தேவைகளைக் கேட்டறிந்தார்!





சென்னை, ஜன.12-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட கொளத்தூர், அம்பத்தூர் வில்லிவாக்கம், திரு.வி.க நகர், எழும்பூர், துறைமுகம் ஆகிய 6 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள 44 வார்டுகளில் அமைப்பு ரீதியாக உள்ள 83 வட்டங்களிலும் மாமன்ற உறுப்பினர்கள் மாநகராட்சி அதிகாரிகள் கழக நிர்வாகிகள் ஆகியோருடன் பகுதிகள் மற்றும் வார்டுகள் வாரியாக உள்ள பாகங்களில் பொதுமக்கள் தேவைகளை கண்டறியும் சிறப்பு முகாம் நேற்று பத்தாவது நாளாக தொடர்ந்து நடைபெறுகிறது.

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (11.1.2025) கொளத்தூர் சட்டமன்ற தொகுதி, மண்டலம்6, வார்டு67, சென்னை, மாதவரம் நெடுஞ்சாலை, ஜமாலியாவில் பகுதிக் கழகச் செயலாளர்கள் ஐசிஎப். வ.முரளிதரன்,எ.நாகராஜன் ஆகியோர் முன்னிலையில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் ரூ.20.33 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் தரைத்தளம் மற்றும் 5 தளங்களுடன் கூடிய புதிய குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகளையும், பேப்பர் மில்ஸ் சாலை, ராஜா தோட்டத்தில் ரூ.27.71 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் ஸ்டில்ட் மற்றும் 9 தளங்களுடன் கூடிய புதிய குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகளையும் ஆய்வு செய்து, மேலும் பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்தாரர்களை அறிவுறுத்தினார்.

மேலும், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.6 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் திரு.வி.க. நகர் பேருந்து நிலையத்தின் கட்டுமானப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை துரிதப்படுத்த பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்தாரர்களை அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் சு.பிரபாகர், கண்காணிப்பு அலுவலர் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்கக இயக்குநர் ப.கணேசன், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜே.பிரவின் குமார், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைமைப் பொறியாளர் லால்பகதூர், கண்காணிப்புப் பொறியாளர் இளம்பரிதி, மண்டல அலுவலர் ஏ.எஸ்.முருகன், செயற்பொறியாளர் செந்தில்நாதன், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் சந்துரு, மகேஷ்குமார், சரிதா மகேஷ் குமார், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி. தாவூத்பீ, திருமதி.அமுதா, திருமதி. சாரதா, திருமதி.ஸ்ரீதணி, திருமதி. ஸ்ரீதேவி.வட்ட செயலாளர்கள் என். பொன்முடி, கே.ஜார்ஜ்குமார், கே.பி. ஆதவன் மணி மற்றும் அரசு அலுவலர்கள் கழகத் தோழர்கள் உடனிருந்தனர்.



இந்தியப் பள்ளிகள் விளையாட்டுக் குழுமம் நடத்திய தேசிய அளவிலான 19 வயதுக்கு உட்பட்ட மாணவியருக்கான 68வது கையுந்து பந்து விளையாட்டுப் போட்டி ஆந்திரா மாநிலம் விஜயவாடாவில் ஜனவரி 5 முதல் 10ஆம் தேதி வரை நடைபெற்றது. இப்போட்டியில் பங்கேற்ற தமிழ்நாடு மாணவியர் அணியினர் இறுதிப் போட்டியில் கர்நாடக மாநில அணியினரை வென்று தங்கப்பதக்கம் பெற்றனர். அவர்கள் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

## புதிய ஓய்வூதியத் திட்டத்தை

# தமிழ்நாட்டில் அமல்படுத்த அரசு முன்வருமா?

## சட்டப்பேரவையில் சி.வி.எம்.பி. எழிலரசன் கேள்வி!

சென்னை, ஜன.12-

சட்டப்பேரவையில் நேற்று கவனஈர்ப்பில், ஒன்றிய அரசின் புதிய ஓய்வூதியத் திட்டத்தின்படி பணிக்காலத்தின் நிறைவு நேரத்தின் போது வருகிற ஊதியத்தின் அடிப்படையில் 50 சதவிகிதத்தை கணக்கெடுத்து, அதன் அடிப்படையில் ஓய்வூதியத்தை கணக்கெடுக்கலாம் என்று அவர்கள் திட்டம் அறிவித்திருப்பதை கவனத்தில் கொண்டு நமது அரசு அதை நிறைவேற்ற முன்வருமா என்று காஞ்சிபுரம் சி.வி.எம்.பி. எழிலரசன் கேள்வி எழுப்பினார்.



இது குறித்து அவரது கவன ஈர்ப்பு வருமாறு:-

நம்முடைய திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்று, தொடர்ந்து மக்களுக்கான நல்லாட்சியை அனைத்துத் தரப்பு மக்களுக்கும் எல்லோருக்கும் எல்லாம் என்று வழங்கிக் கொண்டிருக்கக்கூடிய தாயுமானவரான முதலமைச்சர் அவர்கள், அரசு ஊழியர்கள் தொடர்ந்து ஓய்வூதியத் திட்டத்தைப் பற்றி கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கக்கூடிய வேளையில், ஒன்றிய அரசு எப்பொழுதெல்லாம் DA உயர்வை வழங்கினாலும் உடனடியாக அன்றைக்கே அதனைத் தமிழ்நாட்டிற்கும் வழங்கக்கூடிய ஒரு நல்ல திட்டத்தினை நம்முடைய அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது.

அண்டை மாநிலமான கேரளா, ஆந்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் எல்லாம் நிதிச்சுமையின் காரணமாக அதை வழங்க இயலாத சூழல் இருக்கிற நேரத்தில், தமிழ்நாட்டில் மட்டும் பெரும் நிதிச்சுமை இருந்தாலும், அரசு ஊழியர்களின் காவலராக விளங்கக்கூடிய எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் வழங்குகிறார். இப்போது ஒன்றிய அரசு பணிக்காலத்தின் நிறைவு நேரத்தின்போது வருகிற ஊதியத்தின் அடிப்படையில் 50 சதவிகிதத்தைக் கணக்கெடுத்து, அந்தக் கணக்கெடுப்பின் அடிப்படையிலே ஓய்வூதியத்தைக் கணக்கெடுக்கலாம் என்று அவர்கள் திட்டம் அறிவித்திருப்பதை, நம்முடைய அரசு கவனத்தில்கொண்டு அதை நிறைவேற்ற முன்வருமா என்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

இவ்வாறு சி.வி.எம்.பி. எழிலரசன் கோரினார்.